**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.587** **நாள்: 19.10.2026**

**பெருநகர சென்னை மாநகராட்சியில் மாண்புமிகு அமைச்சர்கள் வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை இன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.**

பெருநகர சென்னை மாநகராட்சியில் மண்டல வாரியாக நியமிக்கப்பட்டுள்ள பொறுப்பு அமைச்சர்கள் மற்றும் சென்னை மாநகராட்சியில் உள்ள மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை இன்று (19.10.2026) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.

வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, மாண்புமிகு பள்ளிக்கல்வி தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் திரு ராஜ்மோகன் அவர்கள், திரு.வி.க. நகர் மண்டலம், வார்டு-77க்குட்பட்ட சுந்தரபுரம் பகுதியிலும், திரு.வி.க. சட்டமன்ற உறுப்பினர் திருமதி எம்.ஆர். பல்லவி அவர்கள், வார்டு-72க்குட்பட்ட சாஸ்திரி நகர் பிரதான சாலையிலும் உள்ள பொது மக்களுக்கு காலை உணவினை வழங்கினர்.

மாண்புமிகு நிதி, திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை அமைச்சர் திரு.நெ.மரிய வில்சன் அவர்கள், தண்டையார்பேட்டை மண்டலம், வார்டு-38க்குட்பட்ட எண்ணூர் நெடுஞ்சாலையில் உள்ள இரயில்வே குளத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் ஆகாயத்தாமரைச் செடிகள் மற்றும் வண்டல்கள் தூர்வாரும் பணியினைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார். பின்னர், அப்பகுதிக்கு எதிரில் சுமார் 30 ஏக்கர் பரப்பளவில் உள்ள இரயில்வே குளத்தினைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, இரயில்வேயின் உரிய அனுமதியினைப் பெற்று குளத்தினை சீரமைத்து மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ள அலுவலர்களுக்கு அறிவுரைகள் வழங்கினார்.

இதனைத் தொடர்ந்து, வார்டு-41க்குட்பட்ட எம்.ஜி.ஆர். நகர் மற்றும் அன்னை சத்யா நகர் ஆகிய இடங்களில் மழைநீர் தேங்கக் கூடிய மிக தாழ்வான பகுதிகளில் தலா ஒன்று 70 HP மோட்டாருடன் கூடிய நீர் சேமிப்புத் தொட்டிகள், ஜெனரேட்டர்கள் மற்றும் கூடுதலாக ஒவ்வொரு இடத்திலும் 100 HP மோட்டார் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, தொடர் கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். பின்னர் காரனேசன் நகரில் உள்ள தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்பில் பொதுமக்களின் கோரிக்கைகளைக் கேட்டறிந்து, அப்பகுதியில் போதிய மின் விளக்குகள் அமைக்கவும், சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளவும், மருத்துவ முகாம் நடத்திடவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

கோடம்பாக்கம் மற்றும் வளசரவாக்கம் மண்டலங்களின் பொறுப்பு அமைச்சர் மாண்புமிகு இயற்கை வளங்கள், சுரங்கம் மற்றும் கனிமவளத் துறை அமைச்சர் டாக்டர்.டி.கே.பிரபு அவர்கள், வளசரவாக்கம் மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் தேங்கும் மழைநீர் ஒருங்கிணைக்கப்பட்டு பெருவாரியாக வெளியேற்றப்படும் வகையில் அமைக்கப்பட்டுள்ள நந்தம்பாக்கம் ஒருங்கிணைப்பு கால்வாய், போரூர் சந்திப்புப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித் , நீர் வெளியேற்றும் மோட்டார்களை பரிசோதிக்கும் பணி, எஸ்.வி.எஸ் குளத்தில் மழைநீர் தேங்கும் வகையில் மேற்கொள்ளப்பட்டுள்ள வடிகால், கோடம்பாக்கம் மண்டலம், சூரைப்பள்ளம் பகுதியில் உள்ள எம்.ஜி.ஆர். நகர் கால்வாய் அடையாறு ஆற்றுடன் கலக்கும் இடம், சின்மயா நகர், விருகம்பாக்கம் கால்வாய் பகுதியில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அமைக்கப்பட்டுள்ள 100 ஹெச்பி மோட்டார் பம்பு செட்டிங், கோயம்பேடு, நியூ காலனி பகுதியில் உள்ள கூவம் ஆற்றுப் படுகை உள்ளிட்டவற்றைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, அலுவலர்களுக்கு அறிவுரைகளை வழங்கினார்.

ஆலந்தூர் மற்றும் அடையாறு மண்டலங்களின் பொறுப்பு அமைச்சர் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. விஜய் தமிழன் பார்த்திபன் அவர்கள், அடையாறு மண்டலம், சைதாப்பேட்டை, அரங்கநாதன் சுரங்கப்பாதையில் தேங்கும் மழைநீர் வெளியேற்றும் மோட்டார் அறையினைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, தொடர் கண்காணிப்பினை மேற்கொள்ள அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

திருவொற்றியூர் மற்றும் மணலி மண்டலங்களின் பொறுப்பு அமைச்சர் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. சீ. ரமேஷ் அவர்கள், மணலி மண்டலம், வார்டு-21க்குட்பட்ட பாடசாலை தெருவில் உள்ள சென்னை தொடக்கப் பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள நிவாரண மையம், சமையல் கூடம் மற்றும் மருத்துவ முகாமினைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார். பின்னர், வார்டு-19க்குட்பட்ட, மாத்தூர் (MMDA) 57 ஆவது தெருவில் உள்ள சென்னை தொடக்கப் பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள, நிவாரண முகாமினைப் பார்வையிட்டு, மக்கள் தங்குவதற்கான தேவையான வசதிகள் குறித்து ஆய்வு செய்தார். வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்து வருவதையொட்டி, மழைக்காலங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னேற்பாடு மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து சேவைத் துறை அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் மணலி மண்டல அலுவலக கூட்டரங்கில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இந்த ஆய்வுகளின்போது, மாண்புமிகு அரசு கொறடா திரு.ஆர்.சபரிநாதன், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.பி.ரேவந்த் சரண் (மதுரவாயல்), திரு.என்.செந்தில்குமார் (திருவொற்றியூர்), மணலி மண்டல கண்காணிப்பு அலுவலர் திரு.பி.குமரவேல் பாண்டியன், இ.ஆ.ப., மண்டல அலுவலர்கள் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**